**துறுசவிய நிதியம் - 2015**

துறுசவிய நிதியத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2000 இன் 23 ஆம் இலக்க துறுசவிய நிதிய அதிகாரச்சட்டத்தின் 21(2) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் நிதியத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து துறுசவிய நிதியத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன

(அ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 01 இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்களுடன் வெளிப்படுத்தப்பட வேண்டிய நிறுவனத்தின் சட்டரீதியான வடிவம், நிறுவனத்தின் செயற்பாடுகள் மற்றும் அடிப்படைச் செயற்பாடுகள் தொடர்பான விபரங்களை உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07 இன் பிரகாரம் சொத்தொன்று பாவனைக்காக பொருத்தமான நிலைக்குள்ளான சந்தர்ப்பம் முதல் அதன் பயன்படு ஆயுட்காலம் முழுவதும் சீரான அடிப்படையில் பெறுமானத் தேய்வு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், நிதியத்தால் சொத்துக்கள் கைப்பற்றப்பட்ட ஆண்டிற்குப் பின்னைய ஆண்டு முதல் பெறுமானத் தேய்விடும் கொள்கை பின்பற்றப்பட்டிருந்தது.

#### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன

(அ) சொத்துக்களைக் கொள்வனவு செய்வதற்காக வழங்கப்பட்ட மூலதன மானியம் ரூபா 7,000,000 தொகை ஆண்டின் வருமானமாகக் கருதி கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதில் பணிக்கொடைக்கான ஒதுக்கத்தின் கணிப்பீட்டு வழுவின் காரணமாக ரூபா 1,166,813 தொகை மேலதிகமாக ஒதுக்கப்பட்டிருந்தது.

### 2.3 பெறவேண்டிய கணக்குகள்

துறுசவிய நிதியத்திற்கு துறுசவிய சங்கங்களிலிருந்து கிடைக்க வேண்டிய 05 வருடங்களை விட பழைய ரூபா 1,028,210 கூட்டுத்தொகையான கடன் மீதிகளை அறவிடுவதற்கு போதியளவான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | | இணங்காமை |
| --- | --- | --- |
| (அ) | 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிய அதிகாரச்சட்டத்தின் 47 ஆம் பிரிவு | சேமலாப நிதியத்தைக் கணிப்பீடு செய்யும் போது உள்ளகபடிகளும் விசேட படிகளும் கவனத்திற் கொள்ளப்பட்டு அது கணிப்பிடப்பட்டமையின் காரணமாக 2015 ஆம் ஆண்டிற்காக ரூபா 471,763 தொகை மேலதிகமாகக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமானம் 371 | செயல்நிமித்த உப கட்டுநிதி பதவிநிலை உத்தியோகத்தரொருவருக்கு வழங்க வேண்டிய போதிலும் தகுதிகாண் காலத்தில் இருக்கின்ற புதிய முகாமைத்துவ உதவியாளர்கள் இருவருக்கு ரூபா 100,000 முதல் ரூபா 700,000 வரையான இடைவீச்சில் முற்பணம் வழங்கப்பட்டிருந்ததுடன் தீர்ப்பதற்கு முன்னர் மீண்டும் உப கட்டுநிதி வழங்கப்பட்ட சந்தர்ப்பங்களும் அவதானிக்கப்பட்டன. |
| (இ) | திறைசேரிச் சுற்றறிக்கை | |
| | (i) 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க சுற்றறிக்கை | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நிலையான சொத்துப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க சுற்றறிக்கை | கணினி உபபாகம் மற்றும் மென்பொருள் தொடர்பான நிலையான சொத்துப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | 2006 திசெம்பர் 13 ஆந் திகதிய டீஎம்எஸ் /பீ/02/ஐ/14/2006 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்கள பணிப்பாளர் நாயகத்தின் கடிதம் | முகாமைத்தவ சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரத்திற்கு முரணாக உயர் சம்பளப் படிநிலையில் வைக்கப்பட்டமையால் மூன்று உத்தியோகத்தர்களுக்கு ரூபா 389,760 சம்பளங்கள் மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது. |

### 2.5 போதிய அதிகாரமின்றிய கொடுக்கல் வாங்கல்கள்

போதியளவான அதிகாரமின்றி மதிப்பீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாட்டை விஞ்சி 2015 ஆம் ஆண்டில் மூலதனச் செலவினத்திற்காக ரூபா 7,803,624 நிதியத்தினால் செலவிடப்பட்டிருந்தது.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் நிதியத்தின் மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 450,932 பற்றாக்குறையாக இருந்ததுடன், அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மிகை ரூபா 1,147,220 ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 1,598,152 வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. ஏனைய வருமானம் ரூபா 6,882,707 இனால் அதிகரித்திருந்த போதிலும் அபிவிருத்திச் செலவினம் ரூபா 6,477,800 இனாலும் ஊழியர் வேதனங்கள் ரூபா 2,659,942 இனாலும் அதிகரித்தமை மேற்கூறப்பட்ட நிதி விளைவுகளின் வீழ்ச்சிக்கான பிரதான காரணங்களாக இருந்தன.

ஊழியர் வேதனம் மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு ஏற்பாடு கழிப்பதற்கு முன் நிதியத்தின் பங்களிப்பு மிகையாக இருந்ததுடன் அது 2011 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரை தொடர்ச்சியாக அதிகரித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

---------------------------------------

### 4.1 செயலாற்றல்

----------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2000 இன் 23 ஆம் இலக்க துறுசவிய நிதிய அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் நிதியத்தின் பிரதான நோக்காக சிறிய இறப்பர் தோட்ட உரிமையாளர்களுக்கு சேகரிக்கும் பழக்கத்தை ஏற்படுத்துதல் மற்றும் அவர்களின் சமூக, பொருளாதார நிலைமையை முன்னேற்றுதல், இறப்பர் கைத்தொழிலுடன் தொடர்புடைய முக்கியமான முதலீடுகளை அதிகரித்தல், சிறிய இறப்பர் தோட்டங்களில் வினைத்திறன் உற்பத்தியை ஏற்படுத்துவதற்குத தேவையான இறப்பர் சுத்திகரிக்கும் பிரிவு மற்றும் இறப்பர் தொழிற்சாலைகள் மற்றும் ஏனைய வசதிகளைக் கைப்பற்றல், அபிவிருத்தி செய்தல் அல்லது உருவாக்குதல், உற்பத்தி விற்பனையை மேம்படுத்துதல் மற்றும் அபிவிருத்தி செய்தல், சிறிய இறப்பர் தோட்ட அபிவிருத்திச் சங்கம் (துறுசவிய சங்கம்) பதிவு செய்தல், முறைப்படுத்துதல் மற்றும் நிதியத்தில் பதிவு செய்துள்ள அதன் சங்கங்களின் அங்கத்தவர்களுக்காக நிதியுதவி வழங்குதல், சிறிய இறப்பர் தோட்டங்களில் இறப்பர் உற்பத்திச் செயற்பாடுகளில் ஈடுபட்டிருக்கின்றவர்களின் அபிவிருத்தி மற்றும் நபர்களுக்காக தேவையான நடவடிக்கைகளை எடுத்தல் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) சங்க அங்கத்தவர்களுக்கு மேற்கொள்ளப்படுகின்ற தெளிவுபடுத்தும் நிகழ்ச்சித்திட்டங்களுக்காக ரூபா 671,357 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும், அந்த பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தும் நோக்குடன் நிறைவேற்றப்பட்டிருந்தா என பின்தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

-------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன

(அ) மீளாய்வாண்டு முழுவதும் வங்கிக் கணக்குகளில் ரூபா 3 மில்லியன் முதல் ரூபா 6 மில்லியன் வரையான வீச்சில் மீதிகள் காணப்பட்டதுடன் அந்த மிகைப் பணம் நிதியத்தின் இலக்குகளை நிறைவேற்றுவதற்கு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மொனராகலை, பதுளை மற்றும் அம்பாறை மாவட்டங்களில் கட்டாயமானது என கருதக் கூடிய 12 துறுசவிய சங்கங்கள் மீள் ஒழுங்கமைக்கப்பட்ட போதிலும் அவை மீள் ஒழுங்கமைக்கப்பட்ட பின்னர் அமுல்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்ப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

-------------------------------------------------------------------

### 5.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

-----------------------------------------------------------

2003 பெப்ரவரி 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் நிதியாண்டு முடிவுற்று 60 நாட்களுக்குள் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், நிதியத்தின் கணக்குகள் 127 நாட்கள் தாமதத்தின் பின்னர் 2016 யூலை 05 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

**5.2 கொள்வனவுச் செயற்பாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இறப்பர் பால் சூடாக்க வைக்கும் அலுமினிய தட்டுக்களைக் கொள்வனவு செய்யும் போது தேவையான மாதிரிகளுக்கு இணங்க ஆகக் குறைந்த விலை சமர்ப்பித்த நிறுவனத்தின் கூறுவிலை நிராகரிக்கப்பட்டு இரண்டாவது ஆகக்குறைந்த விலை சமர்ப்பித்த நிறுவனத்திற்கு கேள்வி கையளிக்கப்பட்டதன் காரணமாக ரூபா 153,624 நட்டமொன்று ஏற்பட்டிருந்தது.

(ஆ) 50 சதவீத மானிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ரூபா 2,250,000 தொகை மீளாய்வாண்டின் போது செலவிடப்பட்டு கொள்வனவு செய்யப்பட்ட 90 இறப்பர் தயாரிக்கும் இயந்திரங்கள் குறித்த தரத்தில் உள்ளதற்கும் மாதிரிகளுக்கு இணங்க இருக்கின்றமைக்கும் பரிசோதனையொன்று உரிய குழுவினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**5.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு**

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 7.4.1 ஆம் பந்தியின் பிரகாரம் ஆகக் குறைந்தது 03 மாதங்களுக்கு ஒரு தடவை கணக்காய்வு மற்றும் முகாமைத்தவக் குழுக் கூட்டம் நடாத்தப்பட வேண்டியிருந்த போதிலும், மீளாய்வாண்டில் 01 கூட்டம் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தது.

**6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் தொடர்பாக அவ்வப்போது தலைவரின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டன. கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் நியமங்களைப் பின்பற்றுவது தொடர்பில் விஷேட கவனம் செலுத்த வேண்டியுள்ளது.